செய்தி வெளியீடு எண்: 232 நாள்: 10.03.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (10.3.2019) முகாம் அலுவலகத்தில், குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கி, 2019–ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமை தமிழ்நாட்டில் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்திய சிறப்பான சுகாதார திட்டங்களின் காரணமாக, 2004–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் போலியோ நோய் இல்லாத நிலை உருவாகியுள்ளது. நடப்பு 2019–ஆம் ஆண்டிற்கான, தேசிய அளவிலான தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமில், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் என 43,051 மையங்களில் சுமார் 72 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது. இப்பணியில் சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த தேசிய அளவிலான தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார்கள்.

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் அவ்வப்போது புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பும் பொருட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுரையின் பேரில், இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தால் இதுவரை 12,886 மருத்துவர்கள் 9,533 செவிலியர்கள் உட்பட 26,619 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

அந்த வகையில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தற்போது தெரிவு செய்யப்பட்ட 139 சித்தா மருந்தாளுநர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 7 சித்தா மருந்தாளுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மகாத்மா காந்தியின் 150–வது பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் சுவஸ்த் பாரத் யாத்ரா என்ற இயக்கத்தின் மூலம் இந்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம், மிதிவண்டி தொடர் பிரச்சாரம் மூலம் ஆரோக்கியமான உணவு, பாதுகாப்பான உணவு, செறிவூட்டப்பட்ட உணவு ஆகியவை குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த, உலக உணவு தினமான 16.10.2018 அன்று நாட்டின் பல்வேறு இடங்களில் மிதிவண்டி தொடர் பேரணி தொடங்கப்பட்டு 27.1.2019 அன்று இப்பேரணி புதுதில்லியில் நிறைவடைந்தது. இம்மிதிவண்டிப் பேரணி, தமிழ்நாட்டில் 16 மாவட்டங்கள் வழியாக பெங்களூர் மற்றும் திருப்பதி சென்றடைந்தது. தமிழ்நாட்டில், இது தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டி, ஓவியப் போட்டி, நடனம், பாட்டு என பல்வேறு நிகழ்ச்சிகளை உணவு பாதுகாப்புத் துறை நடத்தியது. மேலும், உலக உணவு தினத்தையொட்டி, நடமாடும் உணவு ஆய்வகங்கள் மூலம், உணவு பாதுகாப்பு மற்றும் தரத்தை உறுதிசெய்திடும் விதமாக உணவு மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன.

புதுதில்லியில் 29.1.2019 அன்று மத்திய சுகாதாரத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், நாடு முழுவதும் அனைத்து மாநிலங்கள் பங்கு பெற்ற சுவஸ்த் பாரத் யாத்ராவில், சிறந்த மாநிலத்திற்கான விருதினை தமிழ்நாட்டிற்கும், சிறந்த நகரங்களுக்கான விருதுகளை மதுரை மற்றும் சிவகாசி நகரங்களுக்கும், சிறந்த ஆய்வகத்திற்கான விருதினை நடமாடும் உணவு ஆய்வகத்திற்கும், மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களிடம் வழங்கினார்கள். இவ்விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன், உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் திருமதி பி. அமுதா, இ.ஆ.ப., மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை நியமன அலுவலர்கள் டாக்டர் பி. சோமசுந்தரம் மற்றும் டாக்டர் டி. அனுராதா ஆகியோர் உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை செயலாளர்

டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை கூடுதல் செயலாளர் திரு.எஸ். நாகராஜன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.கோ. பிரகாஷ், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர், திரு.எஸ்.கணேஷ், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் டாக்டர் கு.குழந்தைசாமி, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எட்வின்ஜோ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**